# PRIMARY SCHOOL

## SEMESTRAL ASSESSMENT 1 - 2014

## HIGHER MOTHER TONGUE – COMPOSITION

## PRIMARY 6 HMT

**Date :**
**Duration : 50min**

**Marks Allotted: 40**

<u>இவ்வினாத்தாளில் மூன்று தலைப்புகளில் வினாக்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து சுமார் 120 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை, கதை அல்லது கடிதம் எழுது.</u>

1. என்னைக் கவர்ந்த ஒருவர்.

2. கீழே ஒரு கதையின் தொடக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அக்கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்கவும்.

   பள்ளி மணி ஒலித்தது. நான் அவசரமாகப் பள்ளியை விட்டுப் புறப்பட்டேன். நான் என் பள்ளியின் முன்னாலிருக்கும் அடுக்குமாடிக் கட்டடத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தேன். அப்பொழுது 'சோ' என்று மழை பெய்ய ஆரம்பித்தது. என்னிடம் குடை இல்லாததை நான் அப்போதுதான் உணர்ந்தேன்.....................................................

3. பள்ளிகளுக்கிடையே நடைபெற்ற ஒரு போட்டியில் உன் குழு முதல் பரிசு பெற்றுள்ளது. நீயும் உன் குழுவினரும் எவ்வாறு அப்போட்டிக்குத் தயார் செய்தீர்கள் என்பதைப் பற்றி வெளிநாட்டிலிருக்கும் உன் தோழன் / தோழிக்கு ஒரு கடிதம் எழுது.

   (இவ்வினாவிற்கு விடையளிக்கும்போது உனது பெயரையும் முகவரியையும் குறிப்பிடாமல், அகிலன் என்னும் புனைபெயரையும் 71, புக்கிட் தீமா சாலை, சிங்கப்பூர் 656671 என்னும் முகவரியையும் குறிப்பிடவும்)

********************

## "அ" பிரிவு

### A1 பிழை திருத்தம்

**பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது. (10 மதிப்பெண்கள்)**

ஒரு நாள் மீனவன் மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்றான். அவன் வலையைக் (Q1) **கறையில்** போட்டுவிட்டுப் புல்லாங்குழலை எடுத்து ஊதினான். புல்லாங்குழலை (Q2) **வசித்தால்** மீன்கள் ஆடிக்கொண்டு வலையில் வந்து விழும் என்று அவன் நினைத்தான். நீண்ட நேரம் ஆகியும் ஒரு மீன்கூட சிக்கவில்லை. மீனவனுக்குக் கோபம் (Q3) **வரும்.** அவன் புல்லாங்குழலைக் கீழே வைத்துவிட்டு வலையை (Q4) **எடுத்த** தண்ணீரில் வீசினான். வலையில் நிறைய மீன்கள் சிக்கின. மீனவன் மகிழ்ச்சி அடைந்தான். அப்போது வலையில் சிக்கிய மீன்கள் துள்ளிக் (Q5) **குதித்தது.** புல்லாங்குழலின் இசைக்கு ஆடாத மீன்கள், இப்போது ஏன் ஆடுகின்றன என்று மீனவன் யோசித்தான்.

| | |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |

## A2 வாக்கியங்களை முடித்து எழுதுதல்

**பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது. (8 மதிப்பெண்கள்)**

Q6. அந்தப் பள்ளி பல தலைவர்களை உருவாக்கியுள்ளது.

பல தலைவர்கள் உருவாக அந்தப் பள்ளி ______________________________

______________________________________________________.

Q7. பெற்றோர் போட்டியில் வெற்றிப் பெற்ற தங்கள் பிள்ளைகளைப் போற்றினர்.

போட்டியில் வெற்றிப் பெற்ற பிள்ளைகள் ______________________________

______________________________________________________.

Q8. சேமிக்கும் பழக்கத்தைச் சிறு வயதிலேயே ஊக்குவித்தால்தான் அது வழக்கமாகும்.

சேமிக்கும் பழக்கத்தை வழக்கமாக்கிக்கொள்ள சிறு வயதில் ______________

______________________________________________________.

Q9. அதிபரின் பேச்சு மக்களுக்கு வீரத்தை ஏற்படுத்தும்.

மக்களுக்கு வீரம் ஏற்படுத்தும் வகையில் ______________________________

______________________________________________________.

**A3 வேற்றுமை உருபுகள் (8 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து கோடிட்ட இடங்களை நிரப்பு.**

ஒரு நாள் முல்லாவின் தந்தையார் தன் நண்பர்களைச் சந்திக்கச் சென்றார். அப்போது முல்லா வீட்டிலேதான் இருப்பார் என்ற தைரியத்தில் சற்றுத் தாமதமாக (Q10)____________________(வீடு) திரும்பினார். அவர் முல்லாவிடம் சிறிது நேரம் பேசிவிட்டு. (Q11)____________________(கொல்லை) இருக்கும் குதிரையைப் பார்க்கச் சென்றார். அங்கே குதிரை இல்லாததைக்கண்டு திடுக்கிட்டார். உடனே அவர் (Q12)____________________(பதற்றம்) வீட்டுக்குள் ஓடிவந்து, "முல்லா, உன்னுடைய குதிரை காணாமல் போய்விட்டது" என்று படபடப்புடன் கூறினார். உடனே அதற்கு முல்லா, "அப்பாடா, நான் தப்பித்தேன். நல்ல வேளை! நான் மட்டும் அந்தக் (Q13)____________________(குதிரை) மேலே இருந்திருந்தால் நானும் அல்லவா அதனுடன் சேர்ந்து காணாமல் போயிருப்பேன்!" என்றார். அதைக் கேட்ட முல்லாவின் தந்தையார் சிரிப்பதா அல்லது அழுவதா என்று தெரியாமல் திகைத்து நின்றார்.

‘ஆ’ பிரிவு

**B4 கருத்தறிதல்**

**பின்வரும் பகுதியில் Q14 முதல் Q17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது. ( 8 மதிப்பெண்கள்)**

அரசன் ஒரு நாள் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான். Q14 (________). அரசன் முள்ளைப் பிடுங்கியபோது, அது பாதியிலேயே முறிந்து காலின் உள்ளேயே தங்கிவிட்டது. Q15 (________). அரண்மனையை அடைந்ததும் வைத்தியர் ஒருவர் வந்தார். அச்சமயம் அரசனைப் பார்க்க ஒரு இசைக்கலைஞன் வந்திருந்தான். அரசன் அவனைப் பார்த்து, “நான் மிகுந்த வேதனையில் இருக்கிறேன். என் வலியைப் போக்கினால், உனக்கு நூறு பொற்காசுகளைப் பரிசாகத் தருவேன்,” என்றான். Q16 (________). வைத்தியர் அரசனுக்கு வைத்தியம் பார்க்க ஆரம்பித்தார். இசைக்கலைஞன் பாடத் தொடங்கினான். அரசன் பாடலை மெய்ம்மறந்து கேட்டுக்கொண்டே அயர்ந்து தூங்கிவிட்டான். வைத்தியர் அரசனின் காலில் தைத்த முள்ளை எடுத்தார். Q17 (________). அவனது வலி நீங்கியது. அரசன் இசைக்கலைஞனின் பாட்டுத் திறமையைப் பாராட்டி அவனுக்கு நூறு பொற்காசுகளைப் பரிசளித்தான்.

(1) அப்போது அரசனும் மெதுவாக கண் விழித்தான்.

(2) சென்ற பாதையில் கிடந்த ஒரு கம்பி அரசனின் காலில் குத்தியது.

(3) வலி பொறுக்க முடியாமல் அவன் அரண்மனைக்குத் திரும்பினான்.

(4) அரசன் தன் படைவீரர்களை உதவிக்கு அழைத்தான்.

(5) சென்ற வழியில் அவன் காலில் ஒரு முள் தைத்துவிட்டது.

(6) இசைக்கலைஞன் சற்று தயங்கினான்.

(7) திடீரென்று அரசன் திடுக்கிட்டுக் கண் விழித்தான்.

(8) இசைக்கலைஞன் அதற்கு இணங்கினான்.

| வினா எண் | விடை |
|---|---|
| Q14 | |
| Q15 | |
| Q16 | |
| Q17 | |

C5 சுயவிடைக் கருத்தறிதல் (22 மதிப்பெண்கள்)

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனுடன் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது.**

மனிதர்களை நம்பி இயந்திரங்கள் இயங்கிய காலம் மாறிவிட்டது. இப்போது இயந்திரங்களே இயந்திரங்களை இயக்கும் காலம் ஆகும். இதனால் தொழிலாளர்கள் தங்கள் தொழிலுக்கு **இடையூறு** ஏற்படுமோ என அஞ்சும் நிலை ஏற்பட்டுவிட்டது.

இன்றைய தொழிற்சாலைகளில் உலோகத்தால் ஆன இயந்திரக் கைகளையும் கால்களையும் பெற்று மின்சாரக் கண்களையும் சிமிட்டிக்கொண்டு மனிதன் செய்ய வேண்டிய பணிகளை இயந்திரங்கள் செய்து முடிக்கின்றன. இந்த இயந்திர மனிதக் கருவிகள் எந்தவொரு சிறு பாதிப்பும் இல்லாமல் ஒரு வேலையை விரைவாகச் செய்து முடிக்கின்றன.

அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் 'ரோபோட்' (Robot) என அழைக்கக்கூடிய இயந்திர மனிதக்கருவியின் மூலம் பொருள்களைத் தயார் செய்கின்றன. அப்பொருள்களை மலிவான விலையிலும் அதிகமான அளவிலும் விற்று நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்குகின்றன.

உலகில் வாகனத் தொழிற்சாலைகளில்தான் இயந்திர மனிதக் கருவி **மிகுதியாகப்** பயன்படுத்தப்படுகின்றன. கடும் போட்டிகளுக்கிடையே இயங்கும் வாகனத் தொழிற்சாலைகளில் முழுக்க முழுக்க எல்லாப் பணிகளையுமே இயந்திர மனிதக் கருவிகள்தான் செய்கின்றன.

கவனக்குறைவால் விபத்துகள் ஏற்படுகிறது! ஆனால் இயந்திர மனிதக் கருவிகள் இயங்கும் தொழிற்சாலைகளில் விபத்து ஏற்படுவதற்கு வழியே இல்லை. இவை வெயிலால் களைத்துப்போவதில்லை. தொழிற்சாலையில் நிகழும் தொடர்ந்த இரைச்சலால் அதிர்ந்து போவதில்லை. இயந்திரம் பழுதானால் மட்டுமே பணிகள் தடைப்படும். அவற்றைக் கண்காணிப்பதற்கு மட்டும் மின்னணு வல்லுநர் உதவி தேவைப்படுகிறது.

செய்யவேண்டிய பணிகளை மாற்றும்போது மட்டும்தான் இந்த இயந்திரக் கருவியின் பணி தடைப்படும். அப்போது மட்டுமே வல்லுநர் அதன் இயந்திர மூளையைப் புதிய பணிக்கு ஏற்றவாறு வரிசைப்படுத்துவார். இயந்திர மனிதக்கருவியையும் கணினியையும் மனிதனை விடச் சிறந்தவை என்று எண்ணிவிடக்கூடாது. மனிதனின் பல்லாயிரக்கணக்கான திறமைகளில் ஒரு சிலவற்றை மட்டுமே இவை பெற்றிருக்கின்றன. ஆபத்தான வேலைகளிலிருந்தும் திரும்பத் திரும்பச் செய்யவேண்டிய சலிப்பு ஏற்படும் வேலைகளிலிருந்தும் மனிதனை விடுவிக்கத் தோன்றியவையே இயந்திர மனிதக் கருவிகள்.

<u>வினாக்கள்</u>

Q18. தொழிலாளர்களின் அச்சத்திற்கு என்ன காரணம்? (3 ம.பெ)

19. இயந்திர மனிதக் கருவி மனிதனுக்கு என்னென்ன பணிகளைச் செய்கிறது? (4 ம.பெ)

Q20. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இயந்திர மனிதக் கருவி எவ்வாறு உதவுகிறது? (4 ம.பெ)

Q21. இயந்திர மனிதக் கருவிகள் பயன்படுத்தும் தொழிற்சாலைகளில் ஏன் விபத்துகள் ஏற்படுவதில்லை? (4 ம.பெ)

Q.22. எப்போது இயந்திர வல்லுநரின் பணி தேவைப்படுகிறது? (3 ம.பெ)

Q23. இயந்திர மனிதக் கருவி மனிதனைவிடச் சிறந்தது இல்லை என்பதற்கு என்ன காரணம்? (4 ம.பெ)

Q24. பொருள் எழுது (4 மதிப்பெண்கள்)
பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம் பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. இடையூறு _ ____________________ (2 ம. பெ)

ஆ. மிகுதியாக - ____________________ ( 2 ம.பெ)

# P6 HMT
# TESTPAPER 14

<u>ஒரு நாள் மீனவன்.........</u>

1. கரையில் 2. வாசித்தால் 3. வந்தது 4. எடுத்து 5. குதித்தன

6. காரணமாக இருந்துள்ளது..

7. தங்களுடைய பெற்றோரால் போற்றப்பட்டனர்.

8. அதை ஊக்குவிக்க வேண்டும்.

9. அதிபரின் பேச்சு இருக்க வேண்டும்.

10. வீட்டிற்கு 11. கொல்லையில் 12. பதற்றத்தோடு 13. குதிரையின்

14. 5 15. 3 16. 8 17. 1

18. மனிதர்களை நம்பி இயந்திரங்கள் இயங்கிய காலம் மாறி இயந்திரங்களே இயந்திரங்களை இயக்கும் காலம் தற்போது உள்ளதால் தொழிலாளர்கள் தங்கள் தொழிலுக்கு இடையூறு ஏற்பட்டு விடுமோ என்று எண்ணுவதே அவர்களின் அச்சத்திற்குக் காரணம்.

19. இயந்திர மனிதக் கருவி எந்த ஒரு பாதிப்பும் இல்லாமல் பொருள்களைத் தயார் செய்வதோடு தொழிற்சாலைகளில் மனிதன் செய்ய வேண்டிய பணிகளை எல்லாம் செய்கிறது.

20. "ரோபோட்" என அழைக்ககூடிய இயந்திரமனிதக் கருவி மூலம் தயாராகும் பொருள்கள் அதிகமான அளவில் குறைவான விலையில் விற்கப்படுவதன் மூலம் இயந்திர மனிதக் கருவி ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது.

21. இயந்திர மனிதக் கருவிகள் வெயிலால் களைத்துப் போவதில்லை. மற்றும் தொழிற்சாலையில் நிகழும் இரைச்சலால் அதிர்ந்து போவது இல்லை. அதனால், இயந்திர மனிதக் கருவிகள் பயன்படுத்தும் தொழிற்சாலைகளில் விபத்துகள் ஏற்படுவதில்லை.

22. இயந்திரம் பழுதாகி பணிகள் தடைபடும் போதும், அவற்றைக் கண்காணிப்பதற்கும், செய்ய வேண்டிய பணிகள் மாற்றப்படும்போதும், இயந்திர மனிதக் கருவியின் பணி தடைபடும் போதும் அதன் இயந்திர மூளையைப் புதிய பணிக்கு ஏற்றவாறு வரிசைப்படுத்த இயந்திர வல்லுநரின் பணி தேவைப்படுகிறது.

23. இயந்திர மனிதக் கருவி மனிதனிடம் இருக்கும் பல்லாயிரக்கணக்கான திறமைகளில் ஒரு சிலவற்றை மட்டுமே பெற்றிருப்பதும், மனிதனுக்கு ஆபத்து விளைவிக்கும் வேலைகளிருந்து அவனை விடுவிக்கவும், திரும்பத் திரும்ப வேலைகளைச் செய்வதால் ஏற்படும் சலிப்பிலிருந்து அவனை விடுவிக்க மட்டுமே தோன்றியவை என்பதே அவை மனிதனைவிடச் சிறந்தது இல்லை என்பதற்குக் காரணம்.

Q24. சொற்பொருள் (4 மதிப்பெண்கள்)

அ. பாதிப்பு

ஆ. அதிகமாக